சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் விரோதி ஞ ஆவணி மீ 26 ஆம் உ
(1889)

பிரதி விலை: 10 ரூபா
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

இந்து சாதனம்
(HINDU ORGAN)

புத்தகம்: 110 | பிரமாதி வருடம் ஆடித் திங்கள் 12 ஆம் நாள் (28-07-1999) ஆடிப் பூரணை | இதழ்: 4

சிரத்தையுடன் அனுட்டிக்கப்படும் நோன்பு

ஆடி அமாவாசை

விடுமுறை தினமாக்கப்படல் வேண்டும்

ஆடி அமாவாசை இந்து சமயத்தைச் சார்ந்த அனைவராலும் சிரத்தையுடன் அனுட்டிக்கப்படும் அதி முக்கியத்துவம் வாய்ந்த விரத தினம். இத்தினத்தை தேசிய விடுமுறைத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் அல்லது இந்துக்களுக்கு மட்டுமான விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருகின்றது.

ஆடி அமாவாசை தினத்தன்று இந்துக்கள் சமுத்திரத்தில் அல்லது கடலோடு இணைந்த புண்ணிய நீர் நிலைகளில் தீர்த்தமாடி அவ்விடங்களில் தமது முன்னோர்களை நினைவு கூர்ந்து பிதிர்க்கடனாற்றி விரதமிருந்து ஆலய வழிபாடு செய்வர். யாழ் குடாநாட்டில் கீரிமலை, வில்லூன்றி, திருவடிநிலை போன்ற புண்ணிய நீர் நிலைகள் பிதிர்க்கடனாற்றும் பிரதான நிலையங்களாகும். இவ்விடங்களில் மக்கள் ஆயிரக்கணக்கில் கூடுவர்.

இலங்கை சுதந்திரமடைந்தபின் ஒரு காலகட்டத்தில் ஆடி அமாவாசை தினம் இலங்கைத் தேசிய விடுமுறை தினங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. தேசிய விடுமுறை தினங்கள் பட்டியல் ஒரு சமயம் மறுபரிசீலனை செய்யப்பட்ட போது, ஆடி அமாவாசை தினம் தேசிய விடுமுறை தினப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. இருந்த போதிலும் யாழ் குடாநாட்டில் ஆடி அமாவாசை தினம் பிரகடனப்படுத்தப்படாதவொரு உள்ளூர் விடுமுறை நாள் போலவே கொள்ளப்பட்டு வருகிறது. அரச, தனியார் நிறுவனங்கள் அன்று மந்த கதியிலே இயங்குவது வழமை.

ஆடி அமாவாசை தினம் யாழ் மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை தினமாக்கப்பட்டு அதற்குப் பதிலாக இன்னோர் வார இறுதிநாள் வேலை நாளாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குக் கடந்த சில ஆண்டுகளாகப் பல இந்து சமய ஸ்தாபனங்களால் விடுக்கப்பட்டு வந்தது. அவ்வாறு உள்ளூர் விடுமுறை தினமாக்கும் அதிகாரம் மாவட்ட அரசாங்க அதிபருக்கு உண்டா என்பது பற்றிய தெளிவு இன்மையால் இக்கோரிக்கை நிறைவேற்றப் படவில்லை.

கண்டி பெரகரா இறுதிநாளைக் கண்டி மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை தினமாகவும் பிறிதோர் வார இறுதி நாளை வேலை நாளாகவும் செய்வது போன்றதொரு ஏற்பாடு யாழ் மாவட்டத்தில் ஆடி அமாவாசை, நல்லூர்த் தேர்த் திருவிழா ஆகிய இரு தினங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது யாழ் மாவட்டப் பெரும்பான்மை மக்களின் விருப்பமாகும்.

ஆடி அமாவாசை தினம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாகாண விடுமுறை நாளாகவும் இதர மாகாணங்களில் இந்துக்களுக்கு மட்டுமான விடுமுறை நாளாகவும் பிரகடனப்படுத்தப்படுவது இந்துப் பெரு மக்கள் தமது மிக முக்கியமான சமயக் கடமையை நிறைவேற்ற உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தின் மகிமை

—சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம், B, A- அவர்கள்

மூன்றாம் அத்தியாயம்

திருநீறு

தன்னைப் பின்பற்றுபவர்களுக்குச் சைவசமயம் வழங்கும் மிக உயர்வானதும் மிக எளிமையானதுமான அகிலக் கொடை திருநீறு எனப்படும் புனிதமிக்க சாம்பலாகும். சமஸ்கிருதத்தில் இதன் பெயர். விபூதி. விபூதி ''விலைமதிப்பற்ற பொக்கிஷமும் தெய்வீக (மானுட அதீதமான) வலுவும்'' எனப் பொருள்படும். விபூதி இறைவனது அன்பாகிய திருக்கருணையின் பிரதிமை யாதலின் அது மிக உயர்வான கொடையெனப்படுகிறது. எதுவித செலவுமின்றி எங்கும் கிடைப்பதால் அது மிக எளிமையானது. சைவனென்று கூறிக்கொள்பவர் ஒவ் வொருவரும் அதை வைத்திருப்பதால் அது அகிலத்தின் சொத்து. அதை அணியாத எவனும் சைவனல்ல.

அகத்தியர் தேவாரத் திரட்டு இருபத்தைந்து பதிகங்களைக் கொண்டது. இப்பதிகம் ஒவ்வொன்றினதும் முக்கியத்துவத்தை இனம் தெரியாத ஞானி ஒருவர் பாடலாகத் தந்துள்ளார். சம்பந்தரின் திருநீற்றுப்பதிகம் இவ்விருபத்தைந்தினுள் ஒன்று. உமாதேவி என அழைக்கப்படும் இறைவனின் அருளாகிய பராசக்தியை இந்தப்பதிகம் விபரிப்பதாக இந்த ஞானி கூறுகிறார்.

''நீற்றுப் பதிகம் நிகழ்த்துங்காலை மாற்றுப் பரையின் வரலாறாகும்''

என்பது அவர் வாக்கு. ஆனால் இப்பதிகத்திலிருந்து திருநீறு என்பது பராசக்தி என்பதைக் கண்டுபிடிக்க ஞானி ஒருவர் தேவையில்லை.

இப்பதிகத்தில் சம்பந்தர் திருநீற்றின் ஐம்பத்து நான்கு குணவியல்புகளைத் தருகிறார். இவற்றுள் மிகப்பல சிவசக்தியின் நன்கறிந்த இலட்சணங்கள் ஆகும். அவர் திருநீற்றை மந்திரத்துடன் இணங்கண்டுள்ளார் (மந்திரமாவது நீறு). சித்தியார் (1-58) இன்படி மந்திரங்கள் சிவசக்தியால் செயலுக்குத் தூண்டப்பட்டு நிலைப் படுத்தப்பட்டவை. ''சக்திதான் பிரேரித்து பின் தான் அதிட்டித்துக்கொண்டு'' என்கிறது சித்தியார். திருநீறு ஆன்மாவுக்கு விடுதலையைக் கொடுப்பதாகக் கூறப்படுகின்றது. (முத்தி தருவது நீறு). இதையே (ஆன்மாவுக்கு விடுதலை தருவதையே) சிவசக்தியும் செய்கிறது. திருநீறு ஞானத்தைத் தருகிறது (போதம் தருவது நீறு). சிவசக்தி தருவதும் ஞானம்.

ஆகவே திருநீற்றைத் தரிக்கும்போது, நாம் சிவசக்தியை - இறைவனின் அருளை - இறைவனின் கருணையைத் தரிக்கிறோம். எமது நெற்றியும் நாம் திருநீறு தரிக்கும் உடம்பின் இதர இடங்களும் சிவசக்தியின்புனிதமான உறைவிடங்கள் ஆகின்றன. திருநீற்றை அணியும்போது பொதுவாக நாம் ''சிவ சிவ'' என்ற பெரும் மந்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். இந்த மந்திரம் தயிரில் நெய் இருப்பது போல் திருநீற்றில் சிவசக்தியை உறையுமாறு பிரார்த்தித்து விண்ணப்பம் செய்யும் மந்திரமாகும். நாம் அத் திருநீற்றை எண்ணங்களின் உறைவிடமான நெற்றியிலும் உணர்வுகளின் உறைவிடமான நெஞ்சிலும் தரிக்கிறோம். நல்ல மனத்தோடு அணிந்தால் திருநீறு நல்ல எண்ணங்களையும் நல்ல உணர்வுகளையும் தூண்டும்.

(3ம் பக்கம் பார்க்க)

விபூதி தரித்தல்

— மூலரூ ஆறுமுகநாவலர் —

1) சைவர்களால் ஆவசியமாகச் சரீரத்திலே தரிக்கற் பாலனவாகிய சிவசின்னங்கள் யாவை?

விபூதி, உருத்திராக்ஷம் என்னும் இரண்டுமாம்.

2) விபூதியாவது யாது?

பசுவின் சாணத்தை அக்கினியினாலே தகித்தலால் உண்டாகிய திருநீறு. விபூதியின் பெயர் பசிதம், பசுமம், க்ஷாரம், இரக்ஷை.

3) எந்த நிற விபூதி தரிக்கத் தகும்?

வெண்ணிற விபூதியே தரிக்கத் தகும்; கருநிற விபூதியும், செந்நிற விபூதியும், புகைநிற விபூதியும், பொன்னிற விபூதியுந் தரிக்கலாகாது.

4) விபூதியை எப்படி எடுத்து வைத்துக்கொள்ளல் வேண்டும்?

புதுவஸ்திரத்தினாலே வடித்தெடுத்துப் புதுப்பாண்டத்தினுள்ளே இட்டு, மல்லிகை, முல்லை, பாதிரி, சிறுசண்பகம் முதலிய சுகந்த புஷ்பங்களை எடுத்து அதனுள்ளே போட்டுப், புதுவஸ்திரத்தினாலே அதன் வாயைக் கட்டி வைத்துக்கொள்ளல் வேண்டும்.

5) விபூதியை எதில் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும்?

பட்டுப்பையிலேனும், சம்புடத்திலேனும், வில்வக் குடுக்கையிலேனும், சுரைக் குடுக்கையிலேனும் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும். குடுக்கைகளினன்றிப் பிறவற்றில் உள்ள விபூதியைக் கவிழ்க்கலாகாது.

6) விபூதியை எந்தத் திக்கு முகமாக இருந்துகொண்டு தரித்தல் வேண்டும்?

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு தரித்தல் வேண்டும்.

7) விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?

நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து ''சிவ சிவ'' என்று சொல்லி, வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும். இப்படியன்றி, நடுவிரல் ஆழிவிரல்களினால் இடப்பக்கந் தொடுத் திழுத்துப் பெருவிரலினால் வலப்பக்கந் தொடுத் திழுத்துத் தரித்தலுமாம். வாயங்காந்து கொண்டும் தலை, நடுக்கிக் கொண்டும், கவிழ்ந்து கொண்டுந் தரிக்கலாகாது. ஒரு விரலாலேனும் ஒரு கையாலேனுந் தரிக்கலாகாது.

8) விபூதி நிலத்திலே சிந்தினால், யாது செய்தல் வேண்டும்?

சிந்திய விபூதியை எடுத்துவிட்டு, அந்தத் தலத்தைச் சுத்தி செய்தல் வேண்டும்.

(3ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தின் மகிமை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

திருநீற்றை அணியும் சாஸ்திரீய முறையானது[2] திருநீற்றில் சிவசக்தியின் பிரசன்னத்தை ஏற்படுத்திச் செயலளவில் அதனைச் சிவசக்தியுடன் இனங்காண்கிறது. இச்செய்கை நான்கு படிகளைக் கொண்டது.

1) பதினொரு மகாமந்திரங்களும் விபூதிமேல் உச்சரிக்கப்படுவது மூலம் அம்மந்திரங்கள் அத்திருநீற்றில் புகட்டப்படுகின்றன. அவ்வாறு புகட்டப்படுவதன் மூலம் அம்மந்திரங்களிலுள்ள சிவசக்தி திருநீற்றில் விசேடமாக இருக்குமாறு செய்யப்படுகிறது.

2) புனிதமாக்கப்பட்ட நீரை மந்திரமொன்றை உச்சரித்துக் கொண்டு திருநீற்றின் மீது வார்த்தபின் இன்னொரு மந்திரத்தை உச்சரித்த வண்ணம் நீரும் விபூதியும் ஒன்று சேரக் கலக்கப்படுகிறது.

3) அது தலை உச்சியிலும்[3] நெற்றியிலும்[3] நெஞ்சிலும்[3] கொப்பூழிலும்[3] உடம்பின் வேறு பல பகுதிகளிலும் மந்திர உச்சரிப் போடு அணியப் படுகிறது. அவ்வாறு அணியப்படும் போது, முறையே சிவானந்தத்தைத் தரும்[4], மலங்களை அழிக்கும்[4], தொடர் பிறவிகளின் பின் கிடைக்கும் ஒய்வைத் தரும்[4], காத்தலைச் செய்யும்[4] படைத்தலைச் செய்யும்[4] சிவசக்தி அமைந்துள்ள மந்திரங்கள் உச்சரிக்கப்படும்.

4) மிகுதியாயுள்ள திருநீற்றில் மேலும் சிறிது நீரை வார்த்துக் கலக்கி அதில் ஐந்து மகாமந்திரங்களும் பதிக்கப்பட்டபின் தலையிற் தெளிக்கப்படும்.

இம்முறையில் திருநீறு மூன்று கோடுகளாக அணியப்படும். அக்கோடுகள் முறையே கிரியாசத்தி, இச்சாசத்தி, ஞானாசத்தி ஆகும். இந்த சத்திகள் பராசத்தியின் வடிவங்கள் (காலாக்நி ருத்ர உபநிடதம் 7—9)

ஆகவே நாம் திருநீற்றை உரிய முறையில் தெளிவான சித்தையோடு அணிவோமாகில் எமது செயல்கள் (கிரியை), விருப்புகள் (இச்சை), விளக்கம் (ஞானம்) ஆகியன புடமிடப்படும். எம்மில் பிழையான விருப்புகள் எண்ணங்கள் தலை தூக்காது. பராசக்தி எம்மில் உறைகிறாள் என்ற பிரக்ஞை சிறந்த உயர்வானதும் புனிதமானதுமான எண்ணங்களுக்கே இடம் கொடுக்கும். எமது தாயான உமாதேவி எம்மில் உறைகின்றாள் என்று உணர்வோம். சூழ்நிலைகள், பிழையான செயலொன்றைச் செய்யும் நிலைக்கு எம்மை இட்டுச் செல்லும் சதியில் ஈடுபடுமாயின், சிவசத்தி எம்மில் உறைகின்றாள் என்ற எண்ணம் அம்முயற்சியைக் காரிய சாதகமான முறையில் முறியடித்து, அவை (அச்சூழ்நிலைகள்) எமது எசமானர்களாவதற்குப் பதிலாக நாம் அவற்றின் எசமானர்களாகச் செய்யும். எமக்கு நாமே சொல்லிக் கொள்வோம்: ''சிவசத்தியின் புனித மிக்க உறைவிடமான நாம் பிழையானதும் முட்டாள் தனமானதுமான செயலொன்றைச் செய்யும் எண்ணத்துக்கு இடமளிக்கும் நிலைக்கு எவ்வாறு தாழ்ந்து போக முடியும்? இந்தச் செயல் எமக்குச் சில உலகாயத நயங்களைத் தருமாயினும் இந்த இழிவான நயத்தைப் பெறுவதற்காக நாம் சிவசக்தியை உதாசீனம் செய்ய மாட்டோம்.''

(4ம் பக்கம் பார்க்க)

விபூதி தரித்தல்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

9) எவ்வெவர் முன் எவ்வெப்பொழுது விபூதி தரிக்கலாகாது?

சண்டாளர் முன்னும், பாவிகண் முன்னும், அசுத்த நிலத்தும், வழி நடக்கும் போதும், கிடக்கும் போதுந் தரிக்கலாகாது.

10) எவ்வெக் காலங்களிலே விபூதி ஆவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்?

சந்தியாகால மூன்றினும், சூரியோதயத்தினும், சூரியாஸ்தமயனத்தினும், ஸ்நானஞ் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு முன்னும் பின்னும் நித்திரைக்கு முன்னும் பின்னும் மலசல போசனஞ் செய்து சௌசம் பண்ணி ஆசமித்த பின்னும், தீக்ஷை யில்லாதவர் தீண்டிய போதும், பூனை கொக்கு எலி முதலியன தீண்டிய போதும், விபூதி ஆவசியமாகத் தரித்தல் வேண்டும்.

11) விபூதி தரியாதவருடைய முகம் எதற்குச் சமமாகும்?

சுடுகாட்டுக்குச் சமமாகும்; ஆதலினால் விபூதி தரித்துக் கொண்டே புறத்திற் புறப்படல் வேண்டும்.

12) ஆசாரியராயினுஞ் சிவனடியாராயினும் விபூதி தந்தால், எப்படி வாங்கித் தரித்தல் வேண்டும்?

மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கித் தரித்துக் கொண்டு, முன்போல மீண்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

13) எப்படிப்பட்ட விபூதி தரிக்கலாகாது?

ஒரு கையால் வாங்கிய விபூதியும், விலைக்குக் கொண்ட விபூதியும், சிவதீக்ஷை யில்லாதார் தந்த விபூதியுந் தரிக்கலாகாது.

14) சுவாமி முன்னும் சிவாக்கினி முன்னும் குரு முன்னும் சிவனடியார் முன்னும் எப்படி நின்று விபூதி தரித்தல் வேண்டும்?

முகத்தைத் திருப்பி நின்று தரித்தல் வேண்டும்.

15) சுவாமிக்குச் சாத்தப்பட்ட விபூதிப் பிரசாதம் யாவராயினுங் கொண்டுவரின், யாது செய்தல் வேண்டும்?

கொண்டு வந்தவர் தீக்ஷை முதலியவற்றினாலே தம்மின் உயர்ந்தவராயின், அவரை நமஸ்கரித்து வாங்கித் தரித்தல் வேண்டும்: அப்படிப்பட்டவரல்லராயின், அவ்விபூதிப் பிரசாதத்தை ஒரு பாத்திரத்தில் வைப்பித்து, அதனைப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து நமஸ்கரித்து எடுத்துத் தரித்தல் வேண்டும்.

16) விபூதிதாரணம் எத்தனை வகைப்படும்?

உத்தூளனம், திரிபுண்டரம் என இரண்டு வகைப்படும்.

17) திரிபுண்டரமாவது யாது?

மூக்குறித் தொகுதி.

18) திரிபுண்டரம் எப்படித் தரித்தல் வேண்டும்?

வளையாமலும், இடையறாமலும், ஒன்றை ஒன்று தீண்டாமலும், மிக அகலாமலும், இடைவெளி ஒவ்வோரங்குல வளவினதாகத் தரித்தல் வேண்டும்.

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தின் மகிமை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சிவலிங்கத்தை அல்லது வேறு புனிதமான திருவுரு வங்களைத் திருநீற்றினால் அபிடேகஞ் செய்யும் போது திருநீற்றில் தெய்வத்தன்மை பிரசன்னமாயிருப்பது மேலும் துலக்கமாகத் தெரியும். இது ஞானவான்களால் தரப்படும் திருநீற்றுக்கும் பொருந்தும். அப்பருக்கு திலகவதியார் கொடுத்த திருநீறு, அவரில் அதுவரை தூங்கிக் கிடந்த சிவன் மீதான உக்கிரமான பக்தியைக் கிளப்பி விட்டது. ஆலய குரு ஞானவானாகவும் அவரிடம் திருநீறு பெற வழிபடுவோர் தவங்கிடந்ததுமான காலமொன்றும் இருந்தது.

எங்கள் ஞானிகள் ஒவ்வொருவரும் திருநீற்றை புகழ்ந்து பாடியிருப்பதுடன் அதனைப் பக்தி சிரத்தையுடன் அணியுமாறு உபதேசித்து முள்ளனர். '' திருநீற்றை அணிய விருப்பமுடையீர்களாயின் அதனை நிறையப் பூசுங்கள் '' என மாணிக்கவாசகர் கூறுகிறார். ''பூசில்தான் திருநீறே நிறையப் பூசி '' என்பது அவர் வாக்கு. இவ்வாறு நிறையப் பூசுதல் பராசக்தி மீது எமக்குள்ள உண்மையான அன்புக்கு அடையாளம். அற்ப அளவு அணிவது, அரைமனத்தையும் திருநீறு பராசக்தியின் உறைவிடம் என்பதைப் புறக்கணிப்பதையும் அதற்குரிய கௌரவத்தைக் கொடாமையையும் காட்டும்.

திருநீற்றுக்கும் சிவாலயத்திற்கும் தமது உள்ளத்தில் இடம் கொடாதவர்களைத் தூய்மையற்றவர்கள் என உமாபதி சிவாச்சாரியார் கொள்கிறார். ''திருநீறும் சிவாலயமும் உள்ளத்துட் சென்ற புலையர் பாற் செல்லாதே'' என்பது அவர் கூற்று. இன்னோரிடத்தில் மாணிக்கவாசகர் தாம் சாதாரணமாக எல்லோரும் பயப்படும் விடம் பொருந்திய பாம்புகள், கூரிய அம்புகள் போன்றவற்றிற்கு அஞ்சாத போதிலும், திருநீறு அணியாத சைவர்களைக் காண அஞ்சுவதாகக் கூறுகிறார். ''வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே'' என்பது அவர் வாக்கு.

சைவ உலகெங்கும் திருநீறு கிடைக்க வேண்டும். அது எம்மால் வழிபடுவதற்குரியதாகப் போற்றப்படும் மிருகமாகிய பசுவினது சாணத்தை எரித்துப் பெறப்படும். சைவர்கள் வாழுமிடமெங்கும் பசு இருக்கும். அதைத் தவிர அதிர்ஷ்டவசமாகவோ அன்றித் தூரதிர்ஷ்டவசமாகவோ அது எங்கும் விற்பனையாகிறது.

* மூன்றாம் அத்தியாயம் முற்றுப்பெற்றது.

* அடுத்த இதழில் **வழிபாடு** பற்றிய நான்காவது அத்தியாயம் வெளிவரும்.

அடிக்குறிப்புக்கள்

1. புனித சாம்பலின் இதர பெயர்கள் பசிதம் (= ஒளியைத் தருவது; அதாவது ஞானத்தைத் தருவது); பஸ்மம் (= பாவங்களைத் தடுப்பது); (க்ஷரம் = தடைகளை அறுப்பது); ரட்சை (= காப்பது)
2. சைவ அனுட்டானம்
3. இவை ஆத்ம ஞான நிலையங்கள்
4. இவை முறையே அருளல், மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் என அழைக்கப்படும்.

விபூதி தரித்தல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

19) திரிபுண்டரந் தரிக்கத் தக்க தானங்கள் யாவை?

சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறுமாம்.

இவைகளுள், விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகள் இரண்டையுங் கொள்வதும் உண்டு. முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கிப் பன்னிரண்டு தானங் கொள்வதும் உண்டு.

20) திரிபுண்டரந் தரிக்குமிடத்து இன்ன இன்ன தானங்களில் இவ்வளவு இவ்வளவு நீளந் தரித்தல் வேண்டும்என்னும் நியமம் உண்டோ?

ஆம்; நெற்றியில் இரண்டு கடைப்புரூவ வெல்லை நீளமும், மார்பிலும் புயங்களிலும் அவ்வாறங்குல நீளமும், மற்றைத் தானங்களில் ஒவ்வோரங்குல நீளமும் பொருந்தத் தரித்தல் வேண்டும். இவ்வெல்லையிற் கூடினும் குறையினுங் குற்றமாம்.

21) எல்லாரும் எப்பொழுதும் வீபூதியைச் சலத்திற் குழைத்துத் தரிக்கலாமா?

தீக்ஷையுடையவர் சந்தியாகால மூன்றினுஞ் சலத்திற் குழைத்துத் தரிக்கலாம்; மற்றைக் காலங்களிற் சலத்திற் குழையாமலே தரித்தல் வேண்டும். தீக்ஷை யில்லாதவர் மத்தியானத்துக்குப் பின் சலத்திற் குழையாமலே தரித்தல் வேண்டும்.

22) வீபூதிதாரணம் எதற்கு அறிகுறி?

ஞானாக்கினியினாலே தகிக்கப்பட்ட பசுமல நீக்கத்தில் விளங்குஞ் சிவத்துவப் பேற்றிற்கு அறிகுறி.

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

பிரமாதி வருடம் ஆடித் திங்கள் 32 ஆ (17-08-1999) செவ்வாய்க்கிழமை சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

வெளிவந்து விட்டது

நீதி வாக்கியங்கள்

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் —

சைவபரிபாலன சபை வெளியீடு விலை ரூபா 5/-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாவலர் வழியிற் சைவம்

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சமயபாடம் பாடசாலைகளில் 1955 அளவிலேயே கட்டாய பாடமாக்கப்பட்டபோதும் நாவலர் 1848லேயே இதற்கு வழியமைத்தார். இவர் நூறு ஆண்டுகளுக்கு முன்பே சமயக் கல்வியை மையமாக வைத்து ஏனைய வற்றை அதற்கு துணையானவையாக்கித் தன் கல்வித் திட்டத்தை வெளியிட்டார். பாட விதானத்தில் சமய பாடத்திற்கு நாவலர் கொடுத்த முக்கியத்துவத்தை நிலை நாட்ட ஆதாரம் தேடி அலையத் தேவையில்லை. கல்வி சம்பந்தமாக எழுதிய எழுத்து எதிலும் செய்த செயல் எதிலும் இந்த நோக்கமே மேலோங்கியிருந்ததை அவதானிக்கலாம். நல்லொழுக்கத்திற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழி வகுப்பதே கல்வியின் நோக்கம் என்பது நாவலரின் திட்டவட்டமான முடிவாக இருந்தது. சமயக் கல்வி பற்றிய அவரது திட்டங்களில்,

1. படிமுறையாகப் பாடங்களையும், பாட நூல் களையும் அமைத்தல்.
2. பாடசாலைகளை நிறுவுதல், பிரசங்க முறை மூலம் அறிவு புகட்டல்.
3. வயது முதிர்ந்தோருக்கு ஏற்ற போதனை வசதி செய்தல்.

போன்ற நடைமுறைகள் சமய வளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்தன.

சமயக் கல்வி பற்றிய அவரது கொள்கைக்கு ஓர் எடுத்துக் காட்டாக அவரது வேண்டுகோள் ஒன்றினைக் குறிப்பிடலாம். 1860ல் சிதம்பரத்திலே சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடைய கல்விக்கூடம் ஒன்றை நிறுவும் எண்ணத்தை ஒரு வேண்டுகோள் மூலம் விளக்கி இருந்தார். அதன்கண் சமய ஒழுக்கத்தை மிகவும் வற்புறுத்திக் காட்டிய அறிவுரைகள் பாராட்டத் தகுந்தன. அவரது சமயத்தொண்டின் ஆர்வம் இன்றைய தலைமுறையினருக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக உள்ளது.

''யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன் அந்த சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்க மீல்லாதபோது பயன்பெறான். அந்த சமயத்திற்குரிய கடவுள் இவர் என்பதும் அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்கப்பட்ட பாவங்களும் அந்தப் புண்ணிய பாவங்களின் பலன் களாகிய சுக துக்கங்களும் அவரை வழிபடும் முறை மையும், அந்த வழிபாட்டினாலே பெறப்படும் நன்மை யும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத போது அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குருமுகமாக விதிப்படி பெறப்படும் சமய நூற்கல்வி கேள்விகள் இல்லாதபோது அந்த அறிவு உதியாது. ஆதலால் கல்வியும், அறிவும், ஒழுக்கமுமாகிய மூன்றும் வேண்டும். கல்வி கேள்வி இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்ய மாட்டார்கள் என்பது 'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' என்றும் ''கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கரை யூரிற் பாண்டிக்கொடுமுடி நற்றவா'' என்றும் 'கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலா கருணைமா கடலை மற்றவர் அறியா மாணிக்க மலையை' என்று வரும் திருவாக்குகளால் அறிக.''

(மாயாண்டி பாரதி, நாவலர் பெருமான், 1962, பக். 42)

என்ற கருத்து கல்வி, அறிவு, ஒழுக்கம் ஆகிய மூன்றும் நிறைவு பெற்ற சமய வாழ்வுக்கு அவசியம் என்பதனை உணர்த்துகின்றது. பிறவி என்னும் பெருங்கடலிலே மூழ்கிவிடாது துணை நின்று கரைசேர வல்லதாகிய சமயக் கல்வியை மக்கள் அனைவரும் கற்க வழி அமைத்தார். கற்பதை விட்டால் வாழ்வில் அமைதி ஏற்படாது. சமயக் கல்வி ஒவ்வொருவருக்கும் வேண்டும் என்பது அவரது இலட்சியமாக இருந்தது. ஒவ்வொரு வருக்கும் வாழ்க்கையில் விழுப்பம் தரும் செல்வம் கல்வியும் ஒழுக்கமும் ஆகும். அதனைச் சிறந்த தருமமாகப் போற்றிக் கூறினார்.

''வேதாகமங்களை ஓதுதலும், அறிவு நூல்களைப் பிறருக்கு விரித்து உணர்த்துதலும், தருமங்களை எடுத் துப் போதித்தலும் பள்ளிக்கூடம் கட்டுதலும் பெரும் புண்ணியங்கள் என்பது ஞானாமிர்தம் எனும் நூலில் வகுத்துச் சொல்லப்பட்டது. எல்லாத் தருமங்களையும் அறிந்து பயன் பெறுவதற்குச் சமய நூல் உணர்ச்சியே ஏதுவாதலால் சமய நூல் உணர்ச்சியை வளர்த்தலாகிய தருமமே எல்லாத் தருமங்களிலும் மேலானது. ஆதலால், நமது தமிழ் நாடெங்கும் பாடசாலைகளை நிறுவிப் பிள்ளைகளுக்கு சமய நூல்களையும் பொருள் ஈட்டு வதற்கு வேண்டும் உலகியல் நூல்களையும் கற்பித்த லும், திருக்கோயில் தோறும் மக்களுக்குச் சமய நெறி யைப் போதித்தலும் மிக மேலாகிய புண்ணியங்களாம். இச் சிவதருமம் நமது தமிழ் நாடெங்கும் தழைத்தோங்க வேண்டுமென்னும், பேராசையானது என் சிறு வயதில் என் உள்ளத்திலே தோன்றி நாடோறும் பெருகிப் பெருகி இப்பொழுது அவ் உள்ளத்தை விழுங்கித் தான் மேற்கொண்டு நிற்றலான், என் மென்மையை நினைந்து தடைப்படாமல் திருவருளை முன்னிட்டு நின்று எல் லார்க்கும் பொதுவாயுள்ள சிதம்பரத்திலே சில முயற்சி கள் செய்யக் கருதுகின்றேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் சமய வாழ்வில் அறச் செயல்களின் சிறப்பைக் கூறி, அதனைச் செய்வதற்குத் தூண்டி னார். எல்லாத் தருமங்களிலும் சிவ தருமத்தைப் போற்றிக் கூறினார்.

சேக்கிழாரது பெரிய புராணத்தில் நாவலர் அள வற்ற பற்றுக் கொண்டார். சிவனடியாரிடத்தும் அன்பு கொண்டவர். உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த 'சேக்கிழார் புராணம்' என்ற நூலைத் தேடி அரிதிற் பெற்றார். அதனைப் பயின்று பயின்று உள்ளம் உருகினார்.

தொடரும்

சுந்தரர் குருபூசை
பிரமாதி வருடம் ஆடித் திங்கள் 32 ஆ
(17-08-96) செவ்வாய்க்கிழமை

நடேசரபிஷேகம்
பிரமாதி வருடம் ஆவணித் திங்கள் 08 ஆ
(25-08-99) புதன்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் சிந்தனைக்கு!

— சமுகஜோதி கா. கணேசதாசன் —

நாம் இப்போது மிகவும் பெரிய அளவில் விஞ்ஞான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் வாழ்கிறோம். வாழ்க்கையில் பல துறைகளிலும் நாம் பல முன்னேற்றங்களைப் பெற்றிருக்கிறோம். நாம் எதிர் பார்த்ததற்கு மேலாகவே விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. ஆனால் மனிதப் பண்பாடு வளரவில்லை. தரு மம் வளரவில்லை. நீதி வளரவில்லை. நியாயம் வளர வில்லை. இது தான் கலியுக தர்மம் என்று பலர் கூறு கின்றார்கள்.

உலகில் பலதுறைகளில் மிகவும் திறமை வாய்ந்த வர்களைப் பார்க்கிறோம். எவ்வளவு திறமை இருந்தால் தான் என்ன? மனிதனுக்கோ மன அமைதி இல்லை. மகிழ்ச்சி இல்லை. திருப்தி இல்லை.

இதற்கு என்ன தான் காரணம்? மனிதனின் எல் லாத் திறமைகளும் தவறான குறிக்கோள்களைக் கொண்டு செயல்படுவதால் விரயமடைந்து விடுகின்றன. மேலும் மக்களிடையே ஆத்மீக உணர்வு வளரவில்லை. வாழ்க்கையில் சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்ப டுவதில்லை. வாழ்க்கைக்குக் குறிக்கோள் ஒன்று உண்டு. அதுவே இறைவனது திருவடியை அடைதல். கல்வியின் பயனும் இதுவே. இதனை திருவள்ளுவப் பெருந்தகை தனது இரண்டாவது குறளிலேயே நல்ல முறையில் விளக்குகின்றார்.

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்''

நன்றாகப் படித்தவர்களாக இருந்தும் தூய்மையான அறிவுக்கெல்லாம் அறிவாக இருக்கின்ற பகவானை வணங்காவிடில் அவர்கள் படித்த படிப்பு என்ன படிப்பு?

கல்வி கற்பது அறிவுக்காக. நாம் எவ்வளவு கல்வி கற்றாலும் அதிலிருந்து அறிந்து கொண்ட அறிவுக்கு மேல் தொடர்ந்தும் அறிய வேண்டிய அறிவு இருந்து கொண்டே இருக்கிறது. அந்த அறிவின் எல்லை எங்கே முடிகிறது என்று நாடுகின்ற போது அது நாமறிந்த அறிவுக்கு எட்டாததாக விருக்கின்றது. ஆகவே நாம் அறிந்து கொள்ளமுடியாத அறிவு இருந்து கொண்டே இருப்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நம் அறி வுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத் தான் வாலறிவன் என்றும் பகவான் என்றும் அழைக்கின்றோம்.

இந்த அறிவின் பூரணத்தை அடைவதே கல்வியின் குறிக்கோள் என்றும் வள்ளுவர் கூறுகின்றார். அப்பர் சுவாமிகள், ''குறிக்கோள் இலாது கெட்டேன்'' என்றும் பாடியுள்ளார்.

''உண்மைப் பொருளை அறியவிடாது தடுப்பது அகங்காரம் என்னும் ஆணவமே. இதனை அகஇருள் என்றும் கூறுவர். அகஇருள் புற இருளிலும் கொடியது. புற இருள் தன்னைக் காட்டும். அக இருள் தன்னையும் காட்டாது தனக்குள் இருக்கும் பொருளையும் காட் டாது.

சிவம் என்றால் அன்பு. அன்பு வேறு சிவம் வேறு என்று நினைப்பவர் அறிவில்லாதவர் என்பது திருமூலரின் கருத்து. எமக்கெல்லாம் தந்தையாக இருப்பவர் அன்பு மயமான இறைவன். உலகிலுள்ள அனைவரும் நமது சகோதரர்கள். நம்மிடம் நாம் அன்பு கொள்வது போலவே மற்றவரிடமும் நாம் அன்பு கொள்ள வேண் டும். மற்றவர்களுக்கு நாம் தீமை செய்தால் அது நமக்கே நாம் தீங்கு செய்வதாகும்.

நல்ல பழக்கவழக்க ஒழுக்கங்களால் தான் நல்ல மனிதன் உருவாகிறான். சுபாவத்தைவிடப் பழக்கம் ஆயிரம் மடங்கு வலியது என்று சேர் ஐசாக் நியூற்றன் கூறுகின்றார். தீய சுபாவங்களை நல்ல பழக்கவழக்கங் களால் மாற்றலாம். நமது இன்றைய உலகமோ சமூக, பொருளாதார இனப் போராட்டங்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக் கிறது.

சமய வழியிலே வாழப்பயின்று கொண்டவர்கள் தீய பழக்கங்களுக்கு அடிமையாவது இல்லை. ஒழுக்க முடைமை என்பது குற்றமற்ற பழக்கவழக்கங்கள் சேர்ந்த நல்லநடத்தை. ஒவ்வொரு நாளும் நாம் செய்கிற ஒவ் வொரு செயலும் நல்ல நடத்தைக்கு ஒத்ததா என்று சீர்துக்கிச் செய்யும் சீலம் ஒழுக்க முடமையாகும்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.''

என்பது வள்ளுவர் வாக்கு.

இக்குறள் ஒன்றே நம் இந்து இளைஞர்கட்கு சிந் தனை விருந்தாக அமையட்டும்.

வாசகர் கவனத்திற்கு

இந்துசாதனம் — Hindu Organ பத்திரிகையை தவறாது பெற்றுக் கொள்ள விரும்பும் வாசக நேயர்களைச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளு மாறு வேண்டுகிறோம்.

உள்ளூர் வருட சந்தா (தபாற்செலவுடன்) 125/- ரூபா

125/- ரூபாவுக்கான காசோலை அல்லது காசுக்கட்டளையுடன் உங்கள் முகவரியை பத்திராதிபர், இந்துசாதனம், 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். காசோலைகள் சைவ பரிபாலனசபை, யாழ்ப்பாணம். என்ற பெயருக்கு எழுதப்பட வேண்டும்.

பணத்தை நேரடியாகச் செலுத்த விரும்புவோர் 125, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

ஆ - ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி அமாவாசை

பிதிர்க் கடனுக்குச் சிறந்த நாள்

எம்மை விட்டுப் பிரிந்த எம் முன்னோரை நினைவு கூர்ந்து அவர்கள் நலனுக்காகப் பிரார்த்தித்து விரதமிருந்து அதன் மூலம் நம் முன்னோரும் நாமும் நன்மையடையவும் நமது பிற்காலச் சந்ததி தழைத்தோங்கவும் வழிவகுக்கும் ஒரு புனிதமான விரத நாள் ஆடி அமாவாசை.

சூரியனைத் தந்தைக்குரியவனாகவும் சந்திரனைத் தாய்க்குரியவனாகவும் கொள்வது மரபு. சூரியனும் சந்திரனும் ஒன்றுபட்டுப் பூமிக்கு நேரே நேர்படும் நாள்கள் நம் தந்தைவழி முன்னோரை நினைவு கூர ஏற்ற நாள்களாகின்றன. இந்நாள்களே அமாவாசை தினங்கள்.

இவற்றுள்ளும் ஆடிமாதத்து அமாவாசை மிகச் சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் நம் முன்னோரின் நலன்களைக் கவனிப்பவர்களான பிதிர்த் தேவதைகள் எனப்படும் தென்புலத்தாருக்கு உரிய திசை தெற்கு. சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்க ஆரம்பிக்கும் காலம் ஆடி மாதம். ஆகவே ஆடி அமாவாசை பிதிர்க் கடனாற்றச் சிறந்த தினமாக அமைகிறது.

நம்மை விட்டுப் பிரிந்த நம் அன்புக்குரிய நமது முன்னோர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு இறைவனால் படைக்கப்பட்ட ஒருவகைத் தேவ குலத்தவரே பிதிரர்கள். பித்ரு என்ற வடசொல் பிதர எனப் பொருள்படும்.

இறந்துவிட்டவர்களுடன் நாம் தொடர்பு கொள்ள முடியாது. ஆகவே அவர்களது சேம நலன்களைக் கவனிப்பவர்களாகிய பிதிரர்களைப் பூசை, தானம், தர்ப்பணம் என்பவற்றால் திருப்திப்படுத்தி அதன் மூலம் நம் முன்னோருக்கும் நமக்கும் நன்மையைத் தேடிக் கொள்கிறோம்.

நம் வாழ்வின் சேமநலத்தில் தேவர், பிதிரர்களின் பங்கு முக்கியமானது. ஆகவே தேவர்கடனும் பிதிர்க் கடனும் இல்வாழ்வாழ்வுக்கு இன்றியமையாதவை. இதனாலேயே வள்ளுவப் பெருந்தகை

''தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல்
தான் என்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை''

என்கிறார். தென்புலத்தார் என்போர் பிதிரர். பிரபஞ்ச வெளியின் தெற்குப் பக்கம் அவர்களது இடமாகக் கருதப்படுவதால் தென்புலத்தார் எனப்பட்டனர்.

நாம் நமது பெற்றோரையும் முன்னோரையும் அவர்கள் உயிர் வாழும் போது அவர்களுக்கு எதுவித குறைவும் ஏற்படாதவாறு உணவு, உடை, உறையுள் கொடுத்துப் பாதுகாத்தல் வேண்டும். அவர்களுக்கு சிறந்த வைத்தியரைக் கொண்டு வைத்தியம் செய்வித்தல் வேண்டும். அவர்கள் இறந்த பின்னும் செய்ய வேண்டிய சில கடமைகள் உள்ளன: அதிலொன்று அவர்களுக்கு சிராத்தம், தர்ப்பணம் போன்றவற்றைச் செய்தலாகும்.

''பித்ரு தர்ப்பணம்'' என்பதற்கு பித்ருக்களைத் திருப்திப்படுத்தல் எனப்பொருள்படும். ''சிராத்தம்'' என்பதற்கு சிரத்தையுடன் செய்யப்படுவது என்று பொருள். ஆகவே சிரத்தையுடனும் மிக்க பயபக்தியுடனும் பிதிர்க்கடன் ஆற்றவேண்டும். இவ்வாறு செய்தால் செல்வம், ஆயுள், கீர்த்தி, சுவர்க்கம் முதலிய நன்மைகள் கிட்டுவதுடன் சந்ததி தழைத்தோங்கும்; எதிரிகள் நீங்குவர் எனச் சமய நூல்கள் கூறுகின்றன. பிதிர்க்கடனாற்றா விடின் பித்ரு சாபத்திற்கு ஆளாகி வம்சம் விளங்காமல் போகும் எனவும் கூறப்பட்டிருக்கிறது.

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசையன்று தீர்த்த சங்கற்பம் செய்து சமுத்திரத்தில் அல்லது சமுத்திரத்தோடு இணைந்த புண்ணிய நீர் நிலையில் தீர்த்தமாடுவர். தீர்த்த நீரை இறைவனது அருள் நீராக, எம் பாவங்களைக் கழுவும் புனித நீராக நினைந்து, நம் முன்னோரை மனத்திருத்தி அவர்களுடைய பாவங்கள் அகன்று அவர்களுக்கு நற்பேறு கிடைக்க வேண்டுமெனப் பரம்பொருளை வேண்டித் தீர்த்தமாடுவர். ''அருள் நோக்கிற் தீர்த்த நீர் ஆட்டிக்கொண்டாய்'' என்பது அப்பர் வாக்கு.

தீர்த்தமாடியபின் எள்ளும் நீரும் கொண்டு பிதிர்த் தர்ப்பணம் செய்தல் வேண்டும். தர்ப்பணத்தில் எள்ளும் தர்ப்பைப் புல்லும் முக்கிய பங்கு வகிக்கிறது. இவை யிரண்டும் விஷ்ணுவின் உடலிலிருந்து தோன்றியதாகக் கூறப்படுகிறது. உலகிலுள்ள எல்லாப் புண்ணிய தீர்த்தங்களினதும் சாரமே தர்ப்பையும் எள்ளும் என விதந்துரைக்கப்படுகிறது. கெட்ட தேவதைகளுக்கு விஷ்ணு பரமவைரியாதலால் எள்ளைப் பாவிப்பது மூலம் கெட்ட தேவதைகளால் உண்டாகும் இடர்பாடுகள் நீங்கும்.

ஆடி அமாவாசை தினத்தன்று இயன்றளவு தான தருமங்கள் செய்வதும் முக்கியம்.

ஈழத்தில் திருக்கேதீச்சரத்துப் பாலாவித் தீர்த்தம், திருக்கோணேஸ்வரத்துப் பாபநாசதீர்த்தம், கிரிமலை நகுலேஸ்வரர் தீர்த்தம், பூர்வதனுக்கோடி எனப்படும் வில்லூன்றித் தீர்த்தம், பொன்னாலை திருவடிநிலை தீர்த்தம், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் தீர்த்தம், கொழும்பு முகத்துவாரத்தில் கடலோடு சங்கமிக்கும் புனித தீர்த்தம் ஆகியனவும்,

இந்தியாவில் இராமேஸ்வரமும், மூன்று சமுத்திரங்கள் சங்கமிக்கும் கன்யாகுமரியும், கங்கை, யமுனை, கோதாவரி, நர்மதா, சிந்து, காவேரி, துங்கபத்ரா, தாமிரபரணி முதலாய புனித கங்கைக்கரைகளும் திரிவேணி சங்கமமும் பிதிரர்களுக்கு தீர்த்தப் பிராபதம் செய்வதற்குச் சிறந்த இடங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

பிரமாதி வரு ஆடி மீ 12 உ (28-07-1999)

சைவாலய அர்ச்சகர்கள் சிவாச்சாரியார்கள் [2]

சைவாலய பூசைகளையும் சைவக் கிரியைகளையும் பிழையின்றியும் மனவொருமைப் பாட்டுடனும் செய்யக் கூடிய குருமார்களே சைவாலயங்களின் அச்சாணியாகின்றனர்.

இந்தக் குருமார்கள் எப்படிப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் ?

பிராமண சமூகத்திலோ அன்றிச் சைவக் குருமார் குடும்பத்திலோ பிறந்தவர்கள் எல்லோரும் ஆலய பூசைகள், விழாக்கள், கிரியைகளைச் செய்யும் தகுதி உடையவர்கள் எனக் கொள்ளல் ஆகாது. குருமாருக்கு இருக்கவேண்டிய தகுதிகள் பல. அவற்றுள் முக்கியமானவை நான்கு.

ஒழுக்கம் - பண்பு
கல்வி
அறிவு - சாதனை
பக்தி

ஒழுக்கம் மிகமிக முக்கியம். எவ்வளவு உயர்குடிப் பிறந்தாலும் ஒழுக்கம் குறைந்தவன் இழிந்த பிறப்பினன் தான்.

''ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்''.

என்பது வள்ளுவர் வாக்கு.

கற்ற வேதத்தை மறந்தாலும் பின்னர் அதனை நிவர்த்தி செய்யலாம். ஆனால் ஒழுக்கம் கெட்டால் கெட்டது கெட்டது தான் என்பதும் பொய்யா மொழி வாக்கு.

''மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்''

ஒழுக்கமும் பண்பும் உடையவரிடம் அடக்கம், அருளுடைமை, அவா இன்மை, அழுக்காறு இன்மை, அறிவுடைமை, அன்புடைமை, இனிய பேச்சு, இன்னா செய்யாமை, கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, சிற்றினம் சேராமை போன்ற போற்றத்தகு நற்குணங்கள் எல்லாம் அமைந்திருக்கும்.

தில்லைவாழ் அந்தணர் தம் குணவியல்புகளைக் கூற வந்த சேக்கிழார்,

''அருமறை நான்கினோடு ஆறங்கமும் பயின்று வல்லார்'' என்று கூறிய வேகத்தில் வேத ஆகமங்களை ஓதி உணர்ந்தாலும் அவற்றுள் விதித்த ஒழுக்கம் இல்லாவிட்டால் பயனில்லை என்பதை,

''வருமுறை எரி மூன்று ஓம்பி மன்னுயிர் அருளால் மல்கத் தருமமே பொருளாக் கொண்டு''

எனவும்

''மறுவிலாமரபின் வந்து மாறிலா ஒழுக்கம் பூண்டார் அறுதொழில்ஆட்சியாலே அருங்கலி நீக்கியுள்ளார்''

எனவும்

''தானமும் தவமும் வல்லார் தகுதியின்பகுதி சார்ந்தார் ஊனமேல் ஒன்றுமில்லார் உலகெலாம் புகழ்ந்து போற்றும் மானமும் பொறையும் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வார்'

எனவும் வரும் வரிகளில் ஒழுக்கம், பண்பு இரண்டும் பொருந்தியவர்களே சைவக் குருமார்கள் ஆகவிருக்கும் தகைமையை உடையார் என்பதை உணர்த்தியுள்ளார்.''

சைவக் குருமார்களுக்கு இருக்க வேண்டிய இரண்டாவது தகுதி கல்வி, உலகாயதக் கல்வியல்ல, அவர்களது கல்வி.

1. பண்பாட்டுக் கல்வி
2. ஒழுக்கக் கல்வி
3. வடமொழி, தமிழ், கிரந்தம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி
4. பொருள் உணர்ந்து அட்சர சுத்தியோடு (உச்சரிப்புப் பிழை, சொற்பிழையின்றி) வேத அத்தியயனம் செய்ய, ஸ்தோத்திரங்கள் சொல்வதற்கான பயிற்சி.
5. சைவசித்தாந்தம் பற்றிய தெளிவான விளக்கம்.
6. சைவக் கிரியைகளைப் பத்ததிகளில் விதித்தபடி செய்யும் பயிற்சி.
7. சைவக் கிரியைகளுக்கான சைவசித்தாந்த விளக்கம்.
8. அனுட்டான முத்திரைகளைத் தெளிவாகக் காட்டும் பயிற்சியும் அவற்றின் இலக்கணங்களை விளங்கியிருத்தலும்.
9. திருமுறைகள் பற்றிய அறிவு
10. புராணக் கதைகளும் அவை உணர்த்தும் தத்துவங்களும் பற்றிய விளக்கம்.

ஆகியவற்றையும் இவை போன்ற இன்னோரன்ன வற்றையும் உள்ளடக்கிய தாயமைதல் வேண்டும்.

கல்வியின் பயன் அறிவு. அறிவு என்பது கல்வியின் மூலம் எனக்கின்னது வேண்டும் என அறிந்து அதன் வழி நடக்கும் ஒரு உணர்வு நிலையைச் சுட்டுகிறது. இதுதான் தனக்கு நல்லதென அறிந்து கொண்டவன் தன் மனச்சாட்சியோடு அதனை இணைத்துக் கொள்வான். அதன்படி நடப்பான். அதுதான் சாதனை. வெளிக் காரணிகளால் தனது நிலையிலிருந்து மாறமாட்டான். விடயங்களைத் தெரிந்திருத்தல் என்ற அளவு ஏட்டுச் சுரக்காய் போன்றது. தெரிந்து கொண்டதைச் சாதனை செய்தல் தான் கற்ற கல்வியின் பயன்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்கிறார் வள்ளுவர். ஆகவே கல்வியின் விளைவால் உண்டாகும் சாதனை குருமாருக்கு இருக்க வேண்டிய இலட்சணங்களுள் ஒன்று.

அந்தணச் சிறுவனொருவன் உபநயனம் (பூனூல் தரித்தல்) செய்து கொண்டபின் தன்னை ஆசீர்வதிக்குமாறு கோரும் ஒரு முக்கிய சுலோகத்தின் கருத்து பின்வருமாறு: ''இந்த மாணவன் புராணங்களில் வியாசரைப் போலவும் வியாகரணத்தில் பாணினியைப் போலவும் உத்தர மீமாம்சையில் ஸ்ரீ சங்கரரைப் போலவும் தத்துவ ஞானத்தில் ஜனகரைப் போலவும் பகவத் பக்தியில் பிரகலாதனைப் போலவும் உண்மை பேசுவதில் அரிச்சந்திரனைப் போலவும் பிரம்மச்சரியத்தில் பீஷ்மரைப் போலவும் நீண்ட ஆயுளில் மார்க்கண்டேயரைப் போலவும் இருக்கட்டும் என்று தாங்கள் அருள் புரிய வேண்டும்''

ஒழுக்கம், பண்பு, கல்வி அறிவு, சாதனை இத்தனையும் உள்ளவொருவருக்கு பக்திவைராக்கியம் தானாகவே முகிழும். இவையாவும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த விடயங்கள்.

இத்தனை உயர் மனிதப் பண்புகளும் பக்தி வைராக்கியமும் உடையவர்களே சைவாலய அர்ச்சகர்களாகவும் சிவாச்சாரியார்களாகவும் சேவை செய்யும் தகுதியைப் பெறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''விருது குன்றமா மேருவில் நாணர வாஅனல் எரியம்பாய்
பொருது முவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி எந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை அடையாவே''

— சம்பந்தர்

கேதீசநாத ஸுப்ரபாதம் [2]

— வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் —

நான்காவது சுலோகம்:

சூர்யேந்துநேத்ர நயனோபரி பாலநேத்ர
ஸ்வர்தேனுதுக்த தடிதீதட பாஸமான!
சாமாதி வேத வினுதாகில வேதநாத
கேதீசநாத ஸுகதம் தவ ஸுப்ரபாதம்!!

தமிழ் மொழிபெயர்ப்பு:

மதியையும் இரவியையும் இரு கண்களாகக் கொண்டு ஆன்மாக்களுக்கு அருள்புரிபவரே! அவ்விரு கண்களுக்கு மேல் நெற்றியில் நெருப்புக் கண் கொண்டு ஆன்மாக்களின் ஆணவ மலத்தை நீக்குபவரே! காமதேனுவின் பால் நிறைந்த வாவியின் கரையில் வீற்றிருப்பவரே! சாமம் முதலிய நான்கு மறைகளாலும் போற்றப்படுபவரே! நான்கு மறைகளையும் அருளிய தலைவரே! கேதீசப் பெருமானே!

ஐந்தாவது சுலோகம்:

பக்தார்தி பஞ்சன விதாவதி சாயிதக்ஷ
சிந்தாதிரூட விவிதாதி விலோபகாரின்!
வித்வம்ஸ்ய ரக்ஷக புராதன கர்மரோகான்
கேதீசநாத ஸுகதம் தவ ஸுப்ரபாதம்!!

தமிழ் மொழிபெயர்ப்பு:

அடியவர்கள் இன்னல்களை நீக்கியருளுவதில் நிகரற்ற பெருமை வாய்ந்தவரே! உள்ளத்தில் உறைந்த மன நோய்களை நீக்கியருளும் பெருமானே! முன்னை வினை நோய்களை அழித்துக் காப்பவரே! கேதீசப் பெருமானே!

ஆறாவது சுலோசம்:

பாலெளஷதீஷ ஸுமசேகர வைத்யநாத
பாலாம்பிகா ஹ்ருதயபங்கஜ பானுமூர்த்தே!
ஹ்ருத்வா மலம்ச கிருபயா பவரோக ஹாரின்
கேதீச நாத ஸுகதம் தவ ஸுப்ரபாதம்!!

தமிழ் மொழிபெயர்ப்பு:

இளம்பிறைச் சந்திரனை முடியில் அணிந்த பெருமானே! வைத்திய நாதரே! பாலாம்பிகையின் உள்ளத் தாமரையை மலருவிப்பதில் பரிதி போன்றவரே! அருளால் மும்மலங்களை நீக்கிப் பிறவி நோயைப் போக்குபவரே! கேதீசப் பெருமானே!

ஏழாவது சுலோகம்:

பிஷாகரஸ்ய ச புராணவராக மூர்த்தே
ருத்பாட்ய தம்ஷ்ட்ரசகலம் புஜமத்யபாகே!
திருத்வாநிஷம் த்ரிதசரக்ஷக புண்யமூர்த்தே
கேதீச நாத ஸுகதம் தவ ஸுப்ரபாதம்!!

தமிழ் மொழிபெயர்ப்பு:

மூவுலகத்தையும் பயத்தில் மூழ்குவித்த பழைமையான பன்றியின் கோட்டைப் பிடுங்கி மார்பில் அணிந்து எப்பொழுதும் அமரரைப் பாதுகாத்து வரும் புண்ணிய மூர்த்தியே! கேதீசப் பெருமானே!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் பகுதி

கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே!

அன்பின் குழந்தைகளே!

அன்பு வணக்கங்கள். ஆடிப்பிறப்பை ஆனந்தமாகக் கொண்டாடியிருப்பீர்கள் என நம்புகிறேன். ஆடி மாதமென்றவுடன் ஈழத்துச் சைவப் பெருமக்களின் நினைவுக்கு வருவன ஆடிக்கூழ் மட்டுமல்ல. கதிர்காமக் கந்தன் திருவிழா, ஆடிவேல், ஆடி அமாவாசை, மாவிட்டபுரம் கந்தனின் திருவிழா, ஆடிப்பூரம் என்பனவும் ஆடிமாதத்தில் வரும் பெருநிகழ்வுகள். இந்த இதழிலே கதிர்காம, ஆடிவேல் விழாக்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

ஈழத்தின் தென்கிழக்குப் பகுதியில் அடர்ந்த காடுகளுக்கு நடுவே புண்ணிய நதியான மாணிக்ககங்கை அருகே அமைந்திருக்கும் அற்புத மகிமைகள் பொருந்திய புண்ணிய யாத்திரைத் தலம் கதிர்காமம். கதிர்காமம் கொழும்பிலிருந்து 320 கி. மீ. தொலைவில் இருக்கிறது. கொழும்புக்குத் தெற்கே உள்ள காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, திச மகாரகம ஆகிய முக்கிய நகரங்கள் வழியாகக் கதிர்காமம் செல்லலாம். பாதயாத்திரையாகச் செல்வோர் கிழக்குக் கரையோரமாக மட்டக்களப்பு, மண்டூர், திருக்கோவில், பொத்துவில் வழியாக யால தேசிய பூங்காவைக் கடந்து கதிர்காமம் செல்வர்.

கதிர்காமத்தில் ஆடி மாதத்தில் பெருந்திருவிழா நடைபெறும். ஆடிமாதத்துத் திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தம் நடைபெறும். முதற் பதினைந்து அல்லது பதினாறு நாட்களும் மூலஸ்தானத்தில் இருக்கும் புனிதப் பேழை அலங்கரித்த யானை மீது பவனி வரும். இவ்விழாக்காலத்தில் இலட்சக் கணக்கான பக்தர்கள் அங்கு திரளுவர். சுமார் 20,30 வருடங்களுக்கு முன் யாழ் குடாநாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கதிர்காம உற்சவங்காணக் கால்நடையாகப் — பாதயாத்திரையாகச் — செல்வது வழமை. இவர்களது பாதயாத்திரை வைகாசி மாதத்தில் ஆரம்பிக்கும். இவர்கள் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் பொங்கல் விழாவில் கலந்து கொண்டபின் அங்கிருந்து கிழக்குக் கரை வழியாக கிழக்கு மாகாணத்தின் மண்டூர் என்ற ஊரை அடைவர். அங்குள்ள ''சின்னக் கதிர்காமம்'' எனப்படும் பிரசித்திபெற்ற மண்டூர் கந்தசுவாமியாரையும் திருக்கோவில் வேலாயுதரையும் வழிபட்ட பின் பொத்துவிலையடைந்து பின் உகந்தை முருகனை வழிபட்டுக் கொண்டு யாலகாட்டுப் பாதையால் கதிர்காமத்தை அடைவர். இன்னும் பலர் தனிப்பட்ட வாகனங்களிலும் புகையிரத மூலமும் கொழும்பூடாகக் கதிர்காமம் செல்வர்.

வைகாசி மாதத்தில் பாதயாத்திரை செல்வோர்களால் ஏற்படும் ஒருவகை ஆரவாரம் குடாநாடெங்கும் இருக்கும். கால் நடையாகச் சென்ற யாத்திரிகர்கள் கதிர்காமக் கந்தனின் தீர்த்தத் திருவிழா முடிவடைந்தவுடன் பேரூந்து, புகையிரதம் மூலம் கொழும்பு மாநகரை அடைந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்புவர். இவர்களுள் பலர் தமது தலை முடியைக் கந்தனுக்குக் காணிக்கையாக்கி விட்டு மொட்டைத்தலையுடன் திரும்ப வந்து வீட்டில் கொடுக்கும் பூசையும் ஒரு தனிச் சிறப்பு. இவையெல்லாம் இன்று சரித்திரமாகிவிட்டது. எம்மவரது வாழ்க்கை முறை சில பத்து ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு அமைந்திருந்தது என்பதை அறிந்து கொள்வதில் உங்களுக்கு நிச்சயமாக ஆர்வம் இருக்கும். கதிர்காம யாத்திரையும் இவற்றுள் ஒன்று.

கதிர்காமக் கந்தனின் ஆலயத்தருகே தெய்வயானை அம்மன் கோவில், வள்ளியம்மன் கோவில், பிள்ளையார் கோவில் என்பனவும் அமைந்துள்ளன. கதிர்காமக் கந்தனை வழிபட்டபின் அடியார்கள் செல்வக் கதிர்காமம் செல்வர். அங்குள்ள மாணிக்கப் பிள்ளையாரை வணங்கியபின் திரும்பவும் கதிர்காமம் வந்து மாணிக்க கங்கையில் நீராடிவிட்டுக் குமரன் கொலுவிருக்கும் கதிரைமலை உச்சிக்குச் செல்வர். கதிர்காம யாத்திரையின் உச்சக்கட்டம் கதிரைமலைத் தரிசனம் தான். கற்பூர ஒளியில் மூழ்கி இருக்கும் கதிரைமலைச் சிறப்புப் பற்றித் தங்கத்தாத்தா பாடியுள்ள பாடலொன்று இம் மாதம் நீங்கள் பாடி மகிழக் கூடிய பாடல்:

''அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
அன்பொடு சிவாயஎன அருநீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர வொளிகாணாக் கண்ணென்ன
கண்ணே.''

இலகு தமிழில் உள்ள இந்த அழகான பாடலை மூத்தோரைக் கேட்டு உரிய மெட்டுடன் பாடிப் பாருங்கள். தூய்மையான அந்த மாணிக்க கங்கையில் மூழ்கி எழுந்து ''கந்தா சுகம் தா'' எனப்பாடிக் கதிரைமலை காணவேண்டுமென்ற ஆவல் கிளரும். நாட்டுப் பிரச்சனைகளெல்லாம் நல்லவாறு தீர்ந்து நாமெல்லோரும் கதிர்காம யாத்திரையை இலகுவாக மேற்கொள்ளக் கூடிய சூழ்நிலை விரைவில் ஏற்பட வேண்டுமெனக் கதிர்காமக் கந்தனை வேண்டுவோம்.

கதிர்காமக்கந்தனின் தீர்த்தத் திருவிழா முடிவடைந்தவுடன் அநேக அடியார்கள் அவசர அவசரமாகக் கொழும்பு விரைவர். காரணம் அங்கு கோலாகலமாக நடைபெறும் ஆடிவேல்விழா. ஆடிமாதத்தில் நடைபெறுவதாலும் வேல் எடுத்துச் செல்லப்பட்டு வந்தமையாலும் **ஆடிவேல்** எனப்பட்டது.

இவ்விழாவின் வரலாறு பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது: முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்திற்குப் பாதயாத்திரையாக ''வேல்'' எடுத்துச் செல்லப்பட்டது போல் கதிர்காம விழாக்காலத்தில் கொழும்பு, கண்டி, இரத்தினபுரி, பதுளை, கம்பளை, காலி, மட்டக்களப்பு போன்ற நகரங்களிலிருந்தும் கதிர்காமத்திற்கு வேல் எடுத்துச் செல்லப்படும் வழக்கம் இருந்து வந்தது. இப்போதும் ஓரளவு உண்டு.

தமிழ்நாட்டிலுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் எனப்படும் வணிகப் பெருமக்கள் சிறந்த சிவபக்

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10ம் பக்கத் தொடர்ச்சி)

தார்கள். நகரத்தார் எனவழைக்கப்படும் இவர்கள் தமிழ் நாட்டிலும் இந்தியாவின் ஏனைய புண்ணியத் தலங்களிலும் செய்துள்ள ஆலயப் பணிகள் மிகப்பல. திரைகடலோடித் திரவியம் தேடுவதில் வல்ல இவர்கள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற தென், தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள பெரு நகரங்களிலெல்லாம் வணிகத்தில் இரு நூற்றாண்டுகளாக ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் சென்ற விடமெல்லாம் தமிழையும் சைவத்தையும் பேணிவந்தனர். அங்கு சைவக்கோவில்களை அமைத்தனர். அவர்கள் அமைத்த கோவில்களில் அநேகமானவை கதிர்வேலாயுத சுவாமி கோவில் அல்லது கதிரேசன் கோவில் எனப்படும் முருகன் ஆலயங்கள். அவர்கள் இலங்கையில் அமைத்த கதிரேசன் கோவில்கள் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், காலி, இரத்தினபுரி, கம்பளை, நாவலப்பிட்டி, குருநாகல் முதலிய முக்கிய நகரங்களில் உள்ளன.

இலங்கை நகரத்தார்கள் கொழும்பில் நகை வியாபாரத்துக்குப் பேர் பெற்ற செட்டியார் தெருவில் 1820 ஆம் ஆண்டில் ஒரு கதிரேசன் கோவிலை அமைத்தனர். இது இப்போது பழைய கதிரேசன் கோவில் என அழைக்கப்படுகிறது. சிறிது காலத்தின் பின்னர் கொழும்பு வந்தவர்களுக்கு பழைய கதிரேசன கோவிலில் இடம் கிடையாது போகவே அவர்கள் 1850 ஆம் ஆண்டில் செட்டியார் தெருவில் புதிய கதிரேசன் கோவிலொன்றை அமைத்தனர். இவ்விரு கோவில்களையும் சிறப்பாக நடத்துவதில் போட்டியிருந்தபோதிலும் அவை இணைந்தே செயற்படுகின்றன.

கதிர்காமக் கடவுளின் பெருமையை அறிந்திருந்த நகரத்தார், கொழும்பிலிருந்து கதிர்காமத்திற்கு வேல் எடுத்து வந்தனர். இப் பாதயாத்திரை நிறைவேற ஒரு மாதம் வரை எடுத்தது. உலகப் போக்கிலும் கால வேகத்திலும் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக ஒவ்வொரு வருடமும் கதிர்காம பாதயாத்திரை செல்வதில் உள்ள கஷ்டங்கள் உணரப்பட்டது. ஆகவே பழைய கதிரேசன் கோவில் நகரத்தார்கள் கொழும்பில் பம்பலப்பிட்டி என்ற விடத்தில் ஓர் காணி வாங்கி அங்கு ஓர் ஆலயம் அமைத்து அதற்கு **உபயகதிர்காமம்** எனப் பெயரிட்டு அழைத்தனர். அது இப்போ பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோவில் எனவழைக்கப்படுகிறது. இதுபோலவே புதிய கதிரேசன் கோவில் நகரத்தார்களும் வெள்ளவத்தை என்ற கொழும்பின் புற நகர்ப் பகுதியில் காணி வாங்கி உபய கதிர்காமம் என்ற பெயரில் ஆலயமொன்று அமைத்தனர். அது இன்று வெள்ளவத்தை பிள்ளையார் கோவில் என அழைக்கப்படுகிறது.

முன்னர் கொழும்பிலிருந்து கதிர்காமத்திற்கு வேல் எடுத்துப் பாத யாத்திரை சென்றது போல இப்புதிய ஆலயங்கள் அமைந்தபின் செட்டித்தெரு பழைய கதிர் வேலாயுத சுவாமி கோவிலிலிருந்து பம்பலப்பிட்டி உபய கதிர்காமத்திற்கும் புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவிலிலிருந்து வெள்ளவத்தை உபய கதிர்காமத்திற்கும் யாத்திரை சென்று வரும் வழமை ஏற்படுத்தப்பட்டது. இரு கோவில் யாத்திரைகளும் ஒரேயாண்டில் நடை பெறுவதில்லை. மாறி, மாறி ஒவ்வோராண்டும் ஒவ்வொரு கோவிலிலிருந்து வேல் யாத்திரை முறை வைத்து மேற்கொள்ளப்படுகிறது. இந்த யாத்திரையே வேல் விழா எனப்படுகிறது.

முதலாம் நாள் செட்டித்தெருக் கோவிலொன்றிலிருந்து கதிர்வேலாயுத சுவாமி அலங்கரிக்கப்பட்ட தங்க ரதத்தில் உபய கதிர்காமத்திற்கு கொழும்பின் மிக முக்கிய வீதிகள் வழியாக எழுந்தருளுவர். மூன்று நாள்கள் உபய கதிர்காமத்தில் தங்கியிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குத் திருவருள் புரிவர். இம் மூன்று நாட்களும் தமிழ்நாட்டிலிருந்து அழைக்கப்பட்ட கலைஞர்களினதும் உள்ளூர் தலை சிறந்த கலைஞர்களினதும் நாதஸ்வரகானம், சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள் நாள் முழுவதும் நடைபெறும்.

நான்காம் நாள் மாலை உபயகதிர்காமத்திலிருந்து புறப்பட்டு இரவெல்லாம் உலாப்போந்து ஐந்தாம் நாள் காலை செட்டித்தெரு கோவிலைத் தங்கரதம் சென்றடையும். மிகவும் கோலாகலமாக நடைபெறும் ஆடிவேல் பவனியின் போது கதிர்வேலாயுத சுவாமியை ஜனாதிபதி, பிரதமமந்திரி, அரசியல் தலைவர்கள், இராணுவ, காவற்றுறை உயர் அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் உட்படப் பலரும் வணங்கி அருள்பெறுவர்.

கதிர்காமக் கந்தனை வழிபடத் தமது குழந்தைகளையும் அழைத்துச் செல்லும் அடியார்கள், ஆடிவேல் தரிசித்து விட்டுத் தமது குழந்தைகளுக்கு கொழும்பு மாநகரையும் அங்குள்ள மிருகக்காட்சிச்சாலை, அரும் பொருட்காட்சியகம் போன்றவற்றையும் காட்டுவர். பல குழந்தைகளுக்கு இதுவே முதற் புகையிரதப் பிரயாணமாகவும் அமையும். உங்களுக்கும் அவ்வாறானதொரு சந்தர்ப்பம் விரைவில் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்

— ஞானகுரு

தேடிய தேட்டம்

''சைவனுக்கழகு திருவாசகம் படித்தல். திருவாசகம் படித்தவன் இந்தப்பிறவி எடுத்ததைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தப்பிறவி எடுத்ததன் பயனை அவன் பெற்றுவிட்டான். ''அரியதாகிய மானிடப்பிறவி எனக்குக் கிடைத்ததே; எழுபது வருடம் இந்த உடம்போடு வாழ்ந்தேனே. இந்தப் பிறவியிலே, இந்த வயதிலே உயிர்க்கு உறுதியாகிய, நான் தேடிய தேட்டம் யாது?'' என்றொருவன் தன்னை வினாவும் போது, அவன் திருவாசகம் படித்தவனாயின் ''ஆகா! நான் திருவாசகம் படித்தேனல்லவா! அது இதைப் போன்ற பத்துப் பிறவிகளுக்குப் போதுமே'' என்று நினைந்து அவன் பூரண திருப்தி அடையலாம்.''

— சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநெறி - ஆண்டு 11

மீட்டற் பயிற்சி வினாக்கள்

1) பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிய திருவுருவம் யாது?
2) பாவநாசத்தீர்த்தக் கரையை கட்டுவித்தவன் யார்?
3) அளகேச்சரம் எனப்போற்றப்படும் ஆலயம் யாது?
4) தாருகாவனத்து முனிவர்களின் அகங்காரத்தை அடக்க இறைவன் எடுத்துக்கொண்ட திருவடிவம் யாது?
5) ஆடி அமாவாசையின் முக்கியம் யாது?
6) கீரிமலையில் அமைந்துள்ள சிவாலயத்தின் பெயர் யாது?
7) பஞ்சரதங்களும் பவனிவரும் அம்பாள் ஆலயத்தின் பெயர் என்ன?
8) சங்கத்தமிழ் மூன்றும் எவை?
9) கருணாகரப்பிள்ளையார் கோவில் அமைந்துள்ள இடம் யாது?
10) அரசகேசரி தமிழில் தந்த காவியத்தின் பெயர் என்ன?
11) அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் கோவில் அமைந்துள்ள மாவட்டம் யாது?
12) அன்னதானமுருகன் என்று அன்போடு அழைக்கப்படும் முருகனது ஆலயம் யாது?
13) புவனேகபாகுவின் பெயர் கட்டியத்தில் கூறப்படும் ஆலயம் யாது?
14) குமாரபுர ஆலயம் இருந்த மாவட்டம் யாது?
15) ''பச்சைமா மலைபோல் மேனி'' என்னும் பாடலைப்பாடியவர் யார்?
16) கீதை உபதேசம் பெற்றவர் யார்?
17) பொன்னாலையில் உள்ள விஷ்ணு கோவிலின் பெயர் என்ன?
18) பரமனை மதித்திடாப் பங்கயாசனன் யார்?
19) சிவசங்கரபண்டிதர் ஆரம்பித்த சங்கத்தின் பெயர் என்ன?
20) சைவக்கிரியை விளக்க நூலாசிரியர் யார்?
21) சிவயோக சுவாமிகளின் குரு யார்?
22) முத்தானந்தர் என்னும் தீட்சாநாமம் உடையவர் யார்?
23) கடையிற்சுவாமி கோவில் உள்ள இடத்தின் பெயர் யாது?
24) அறிவால் நிறைந்த களஞ்சியமாக விளங்குவது யாது?
25) அன்புநெறி நின்ற அடியார்களின் தொகை யாது?
26) ''வித்தகம் பேச வேண்டாம் பணி செய்யவேண்டும் என்றார்'' இது யார் கூற்று?
27) மாயையின் மகன் யார்?
28) ''வாழுதல் வேண்டும் நெஞ்சந் தடுத்தது மானமொன்றே'' இது யார் கூற்று?
29) பெரிய புராணத்தின் முதன் நூல்யாது?
30) சித்தாந்த அட்டகத்தை இயற்றியவர் யார்?
31) சந்தான குரவர்களின் பெயர்களை ஒழுங்கு முறைப்படி எழுதுக?
32) தமிழ் வேதம் என்று போற்றப்படுவன யாவை?
33) சித்தாந்த சாத்திரங்களில் முதனூல் யாது?
34) உற்சவம் என்ற சொல்லின் பொருள் யாது?
35) ஆணவத்தின் பிரதான தொழில் யாது?
36) சற்காரிய வாதம் என்றால் என்ன?
37) கடவுளுக்குள்ள இரண்டு நிலைகள் எவை?
38) மூவகை ஆன்மாக்கள் எவை?
39) ஆணவத்தின் வேறு பெயர்கள் எவை?
40) சிவபெருமான் ''நீலமார் கடல் விடத்தினை உண்டு கண்டத்தே வைத்தசீலம்'' எதனைக் குறிக்கின்றது?
41) திருமூலர் இலங்கையைச் சிவபூமி என்று சிறப்பித்துக் கூறியது ஏன்?
42) சூரனைப்பற்றிய கதைவாயிலாகக் கந்தபுராண ஆசிரியர் விளக்கிக் காட்டும் சைவ சித்தாந்த உண்மை யாது?
43) பெரிய புராணத்தின் காவிய நாயகனாகச் சுந்தர மூர்த்திநாயனாரை சேக்கிழார் கொண்டதற்குக் காரணம் யாது?
44) திருவருட்பயனுக்குச் சிறந்த உரை எழுதிய ஈழத்துச் சைவப் பெரியார் யார்?
45) பலிபீடத்தின் மறுபெயர் என்ன?
46) முக்குணங்கள் எவை?
47) திருமந்திர நூலில் எத்தனை தந்திரங்கள் உள்ளன?
48) திருவிசைப்பா பாடியவர்களின் தொகை யாது?
49) ஐம்பொறிகள் எவை?
50) சகலகலாவல்லிமாலை பாடியவர் யார்?

சைவசமயப் பெருநாள்கள்

(ஆடிப் பூரணை முதல் ஆவணிப் பூரணை வரை)

ஆடி	12	வ (28-07-99)	புதன்	பூரணை
	16	வ (01-08-99)	ஞாயிறு	சங்கடஹரசதுர்த்தி
	20	வ (05-08-99)	வியாழன்	கார்த்திகை
	24	வ (09-08-99)	திங்கள்	பிரதோஷம்
	26	வ (11-08-99)	புதன்	ஆடி அமாவாசை
	28	வ (13-08-99)	வெள்ளி	ஆடிப்பூரம்
	30	வ (15-08-99)	ஞாயிறு	சதுர்த்தி
	32	வ (17-08-99)	செவ்வாய்	ஷஷ்டி, சுந்தரர் குருபூசை
ஆவணி	01	வ (18-08-99)	புதன்	மாதப்பிறப்பு
	05	வ (22-08-99)	ஞாயிறு	ஆவணி மூலம்
	07	வ (24-08-99)	செவ்வாய்	பிரதோஷம்
	08	வ (25-08-99)	புதன்	நடேசரபிஷேகம்
	09	வ (26-08-99)	வியாழன்	பூரணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகமங்களும் அவை கூறும் வழிபாடுகளும்

— சைவப்புலவர் வ. கந்தசாமி —

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஆகமம் ஆப்தவாக்கியம். ஆகமம் என்ற சொல்லின் பொருள் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசஞ் செய்து ஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைத்தருதல் என்பதாகும். ஆ = ஞானம், க = மோட்சம், ம = மலநாசம் அன்றியும் ஆ = பாசம், க = பசு, ம = பதி எனப் பொருள்பட்டு தன்னைப் பழகினோர்க்கு முப்பொருளின் இயல்பை உணர்த்துவது எனப் பொருள் கொள்ளப் படும்.

நான்மறைகளையும் ஆறங்கங்களோடும் மற்று முள்ள கலைஞானங்களோடும் கற்றுணர்ந்த சனகாதி முனிவர்கள் சிவாகம ஞானத்தினாலேதான் மோகத் தைத்துவிர்த்து மனோலயமடைந்து ஞானமயமானார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஆகமங்கள் மூலாகமம், உபாகமம் என இருபகுதி களாக உள்ளன. மூலாகமங்கள் காமிகம் முதலாக வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும். ஒவ்வொரு ஆக மத்துக்கும் உப ஆகமங்கள் உண்டு. உப ஆகமங்களின் தொகை 207 ஆகும். சிவபெருமானுக்கு ஆகமங்கள் அங்கங்களாய் அமைந்துள்ளன என்று கூறப்பட்டுள்ளது. ''ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்று மணிவாசக சுவாமிகளும் அருளியுள்ளார்கள்.

எனவே ஆகமங்கள் சிவபெருமானை முறைப்படி வழிபடுவதற்குரிய முறைகளை விரிவாகக் கூறுகின்றன. அம்முறைகள் நாற்பாதங்கள் எனப்படும். நாற்பாதங் களாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன வாம்.

கடவுளை அடைதற்கு ஆலயவழிபாடு எளிதானது. அனைவராலும் செய்யக்கூடியது. இது செயல்முறை வழியாம். ஆகவேதான் சிவாகமங்களில் ஆலய வழி பாட்டுக் கிரியைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. திருக்கோயில் தொண்டுகளும் வழிபாடுகளும் பக்தியை வளர்க்கும். உள்ளத்தைத் தூய்மையாக்கும். பேரானந் தப் பெருவாழ்வைக் கொடுக்கும். வழிபாட்டின் பய னைப்பெற விரும்புவோருக்கு ஆத்ம, ஸ்நான, திரவிய, இலிங்க, மந்திரம் ஆகிய ஐவகைச் சுத்திகளும் இன்றிய மையாதனவாகச் சிவகாமங்கள் கூறுகின்றன.

வழிபடுவோரின் தூய்மைக்காக விரதம், செபம், தியானம், தோத்திரம், தலயாத்திரை செய்தல், சிவ சின்னங்கள் அணிதல் என்பன அறிவுறுத்தப்பெற்றுள் ளன. வேதங்களில் வைதிக யாகம் போன்று சிவாகமங் களில் சிவயாகம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. நித்திய நைமித்தியக் கிரியைகள் மிக விரிந்தும், பரந்தும் அமைந்துள்ளன. மந்திரங்களினால் மண், கல், மரம் ஆகிய அனைத்தும் தெய்வீக இயல்பைப் பெறுகின்றன என்பது சிவாகமத் துணிபு.

கோயில்கள் அமைத்தற்குரிய சகல விஷயங்களும் ஆகமங்களில் உள்ளன. கோயிலின் அமைப்பை நாம் கூர்ந்து கவனித்தால் அங்கு பல உறுப்புக்கள் இருப்ப தைக் காணலாம். இவற்றுள் மூலவிக்கிரகம் எழுந்தருளி யிருக்கும் கட்டடம் முழுமையும் விமானம் எனப்படும். மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் அறை கற்பக்கிரகம் எனப்படும் கற்பக்கிரகத்தை அடுத்து மண்டபங்கள் உள்ளன. மண்டபங்களைச் சூழ்ந்து வீதிகள் அல்லது பிரகாரங்கள் உள்ளன. இவைகளின் அளவுகள், தன்மை கள் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

கோயில் கட்டும் சிற்பிகளின் இயல்பு, தகுதி என்பன ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. கோயிற்கட் டடக்கலையில் கைதேர்ந்தவன் ஸ்தபதி என்பவன். ஸ்தபதி சாத்திரங்களில் வல்லவன். ஆகம அறிவு மிக் கவன்.

சைவாலயங்களிலே நித்திய பூசை, உற்சவம், பிர திஷ்டை, பிராயச்சித்தங்கள் எல்லாம் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்த சிவாகம விதிப் படியே நடைபெறும். இவைகள் வேறெந்த நூல்களிலும் விதிக்கப்படவில்லை என்பதனைப்பின்வரும் நெறியாளர் வாக்கினால் அறியலாம்.

பொங்குமாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்குமாகி யிருந்தவர் பூசனைக்
கங்கண் வேண்டு நிபந்தமாராய்ந்துள்ளான்
துங்க வாகமம் சொன்னமுறைமையால்

— (சேக்கிழார்)

ஐவகை யுருவிலொன்றை யாகம விதியாலுய்த்து
மெய்வழிபாடு செய்து வேண்டியாங் கருளும்
பெற்றான்

— (கச்சியப்ப சிவாச்சாரியார்)

மனிதனுடைய சுகவாழ்க்கைக்கு வேண்டப்படும் ஆசாரங்கள், ஒழுக்கங்கள், வாழ்க்கை முறைகள் எல் லாம் ஆகமங்களில் காணப்படும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் எழுதிய சைவ வினாவிடை முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம் ஆகமங்களின் சாரமே யாம். இன்னும் மறைஞானசம்பந்த நாயனார் தமிழில் அருளிச்செய்த சைவ சமய நெறியும் அதற்கு நாவலர் பெருமான் எழுதிய உரையும் ஆகமத்தின் சாரமே ஆகும்.

ஆகமங்கள் விரித்துக்கூறும் விதிகள் அனைத்தை யும் பிரமாணமாகக்கொண்டு கிரியைகள் செய்யும் முறை யினை ஒழுங்குபடுத்தி முறைமையாகக் கூறும் வழி நூல் கள் பல தோன்றித் தனி நூல்களாக விளங்கு கின்றன இவற்றிற்குப் பத்ததிகள் என்று பெயர். இவை கள் சிவாச்சாரியார்களால் வகுக்கப்பட்டு அவரவர்கள் பெயர்களைத்தாங்கித் தனி நூல்களாக விளங்குகின் றன. இவைகளுள் சோமசம்பு பத்ததி, அகோர சிவாச் சாரியார் பத்ததி முதன்மையானவை.

பெரும்பாலும் அகோரசிவாச்சாரியார் பத்ததியையே எம் நாட்டில் ஆலய சிவாச்சாரியார்கள் பயன்படுத்து வதை அவதானிக்க முடிகின்றது.

ஆகமங்களில் இன்றைய விஞ்ஞானிகளும் வியப்ப டையக்கூடிய அளவில் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவும், பொறியியல் கட்டட வேலைத்திறன் முதலிய நுட்பங் களும் உள்ளன. நாட்டில் நோய், துன்பம், வரட்சி முதலிய உற்பாதங்கள் நிகழும்போது அவற்றின் நலிவை

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மூலம்

திருவாதவூரடிகளுக்காகத் திருப்பெருந்துறையான் ''நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ் வித்துப் பெரிய தென்னன் மதுரையெலாம் பிச்ச தேற்றி''த் திருவிளையாடல் புரிந்த நாள் ஆவணி மூலத் திருநாள்.

சிவகணங்களெல்லாம் குதிரைச் சேவகர்களாகப் புடைசூழ்ந்துவர அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு கால்களையும் ஞானகாண்டம், கருமகாண்டம் என்ற இரண்டு செவிகளையும் பரஞானம், அபரஞானம், ஆகிய இரண்டு கண்களையும் அரிய விதியாகிய முகத்தி னையும் விலக்காகிய வாலையும் ஆகமங்களாகிய புற வணிகளையும் ஆகம மந்திரங்களாகிய சதங்கைமாலை, கிண்கிணிமாலை, சிலம்பு, முதலியவற்றையும் இருமருங் கும் சூரியசந்திரர்களாகிய அங்கவடிகளையும் பிரணவ மாகிய கடிவாளத்தையும் உபநிடதமாகிய கல்லணையை யும் நான்முகனின் முகங்களாகிய இலாயத்தையும் கொண்ட வேதமாகிய குதிரையின் மீது அகவிருளையும் புறவிருளையும் போக்கி ஒளிவீசும் ஞானவாள் ஏந்திக் கொண்டு எம்பெருமான் பரிமேலழகனாக மதுரை வீதியில் ஆரோகணித்த தினம் ஆவணி மூலம்.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலுக்கு வெளியேயுள்ள முக்கிய வீதிகளுள் ஒன்று ஆவணிமூல வீதி. இவ் வீதியிலேயே மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனமும் அமைந்துள்ளது.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் ஆவணி மூலப் பெருவிழா பதினெட்டு நாட்கள் நடை பெறும். சந்திரசேகரருக்கு ஆறு நாட்களும் பஞ்சமூர்த் திகளுக்குப் பன்னிரண்டு நாட்களும் விழா நடைபெறும். பன்னிரண்டு தினங்களிலும் பஞ்சமூர்த்திகள் ஆவணி மூல வீதிகளில் வலம் வருவர்.

முதல்நாள் கொடியேற்றமும் ஏழாம்நாள் அருள்மிகு சுந்தரேசுவரருக்குப் பட்டாபிஷேகமும் ஆவணி மூலப் பெருநாளான எட்டாம் நாள் குதிரைக் கயிறு மாற்று தலும் ஒன்பதாம் நாள் பிட்டுக்கு மண்சுமந்த உற்சவ மும் பன்னிரண்டாம் நாள் அவிட்டமும் பூரணையும் கூடிய நாளில் தீர்த்தோற்சவமும் நடைபெறும். அன் றிரவு திருப்பரங்குன்றம் சுப்பிரமணியரும் திருவாதவூர் மாணிக்கவாசகரும் விடைபெறுதல் இடம்பெறும். (திருப் பரங்குன்றம் மதுரை மாநகரின் தென்மேற்கே ஐந்து மைல் தூரத்திலும் திருவாதவூர் தென்கிழக்கே பதி னைந்து மைல் தூரத்திலும் அமைந்துள்ளது.)

ஈழநாட்டில் பல சிவஸ்தலங்களில் ஆவணி மூலத் தன்று பிட்டுக்கு மண் சுமந்த உற்சவம் நடைபெறும் வழக்கு உள்ளது. இத்திருநாளில் ''கலி மதுரை மண் சுமந்து கூலி கொண்டு அக்கோலால் மொத்துண்டு புண் சுமந்த பொன் மேனி''யனை பண்சுமந்த பாடலால் தோத்தரித்து வணங்கி நலம் பெறுவோமாக.

சிவாகமங்களும் அவை கூறும் வழிபாடுகளும்

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கச் சாந்திகள் செய்யவும் ஆகமங்கள் வழிகாட்டு கின்றன. ஆன்மாவைப்பற்றியும் ஆன்மாவின் பொய்ச் சார்பாகிய உலகத்தைப்பற்றியும், அதன் மெய்ச்சார் பாகிய இறைவனைப் பற்றியும் ஆகமங்கள் ஞானபாதத் தில் விளக்குகின்றன. பதி, பசு, பாசம் ஆகிய முப் பொருள்களின் உண்மைகளை ஆகமங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

ஆன்மா சிவத்தைச் சார்ந்து சிவமயமாக நிற்கும் அத்துவித நிலையை ஆகமங்கள் மூலம் தெளிவுபடுத்திக் கொள்ள வாய்ப்புண்டு.

சிவவழிபாட்டின் முறைகளைக்கூறும் ஆகமங்கள் கோவில் அமைப்பையும் எடுத்துக்கூறுகின்றன.

ஆலயம், மண்டபம், கோபுரம், பிரகாரம் முதலிய வற்றையும் லிங்கத்தின் அளவு நோக்கியே அமைத்தல் வேண்டும் என்பது ஆகமவிதியாகும். விமானத்தின்மேல் வைக்கப்படும் ஸ்தூபி தங்கம், வெள்ளி, தாமிரம் முதலியவற்றால் இயல்புக்குத்தக்கவாறு அமைக்கலாம் என காரணாகமம் கூறுகின்றது.

திருவுருவச்சிலைகள் செய்வதற்குக் கருங்கல் எப்படி யானதாக இருத்தல் வேண்டும் என்றும், அதனைப் பரீட் சித்துப்பார்த்து ஆண்கல்லினால் ஆண் சிலைகளையும், பெண்கல்லினால் பெண் சிலைகளையும் உருவாக்க ஆகமம் வழிகாட்டுகின்றது.

ஆகவே சைவ சமய மக்களாகிய நாங்கள் சிவாகம நெறிகளை நன்கு அறிந்து எமது ஆலயங்களை விதி முறைப்படி நடத்தி, அதனுடன் எமது வாழ்க்கையை யும் சிவநெறிப்படுத்தி வாழ்வதற்கு முயற்சி செய்வோ மாக.

ஆருரன் உரைத்த தமிழ்

''பல்லுயிர் வாழுந் தெண்ணீர்ப் பழமண்ணிப் படிக்கரையை
அல்லியந் தாமரைத்தார் ஆரூரன் உரைத்த தமிழ்
சொல்லுதல் கேட்டல் வல்லார் அவர்க்குந் தமர்க்குங் கிளைக்கும்
எல்லியும் நண்பகலும் இடர் கூருதல் இல்லையன்றே''

— சுந்தரர் தேவாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநெறி - ஆண்டு 11

மீட்டற் பயிற்சி விடைகள்

1) தட்சணாமூர்த்தி வடிவம்
2) சோழ இளவரசனாகிய குளக்கோட்டன்
3) முன்னேச்சரம்
4) பிக்ஷாடன மூர்த்தி.
5) பிதிர்க்கடன் செலுத்தும் பெருநாள்
6) நகுலேச்சுரம்
7) மாத்தளை முத்துமாரி அம்மன் கோவில்
8) இயல், இசை, நாடகம்.
9) உரும்பராய்
10) இரகுவம்சம்
11) மட்டக்களப்பு
12) செல்வச்சந்நிதி
13) நல்லூர்க் கந்தசாமி கோவில்
14) முல்லைத்தீவு
15) தொண்டரடிப் பொடியாழ்வார்
16) அருச்சுனன்
17) வரதராஜப் பெருமாள் கோவில்
18) பிரமா
19) பரமத கண்டன சுயமத ஸ்தாபன சங்கம்
20) சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்.
21) செல்லப்பா சுவாமிகள்
22) கடையிற் சுவாமிகள்
23) நீராவியடி
24) கந்தபுராணம்
25) அறுபத்துமூன்று
26) வயோதிப வடிவமாக வந்த சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் கூறியது.
27) சூரபத்மன்
28) சூரபத்மன்
29) திருத் தொண்டத் தொகை
30) உமாபதி சிவம்
31) மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார்
32) தேவாரம், திருவாசகம்
33) சிவஞான போதம்
34) மேலான பஞ்சகிருத்தியம்
35) ஆன்மாவின் அறிவை மயக்குதல்
36) உள்ளது இல்லதாகாது இல்லது உள்ளதாகாது. உள்ளதிலிருந்தே உள்ளது தோன்றும். இல்லதில் இருந்து உள்ளது தோன்ற மாட்டாது.
37) சொரூபநிலை, தடத்தநிலை
38) சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்
39) மூலமலம், சகசமலம், இருள்மலம்.
40) இறைவன் பேரருட் பெருங்கருணைத்திறத்தவன் என்பதனை உணர்த்துகின்றது.
41) இலங்கையில் தொன்று தொட்டே சிவவழிபாடு சிறந்து விளங்கியமை
42) இருண்மலமாய ஆணவத்தின் இயல்பு
43) பெரிய புராணத்துக்குத் கருவாயமைந்த திருத் தொண்டத் தொகையை சுந்தரர் பாடி முதன் முதலாக அடியார் பெருமையைக் கூறியது.
44) சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்
45) பத்திரலிங்கம்
46) இராசதம், தாமதம், சாத்விகம்
47) ஒன்பது
48) ஒன்பது
49) மெய், வாய், கண், மூக்கு, செவி
50) குமர குருபர சுவாமிகள்

தலைநகரில் புராணபடனம்

கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் சித்திரைக் கார்த்திகை முதல் ஆனி உத்தரம் வரை அறுபத்தைந்து நாள்கள் தினமும் காலையிலும் மாலையிலும் கந்தபுராண படனம் நடந்தது. ஆனி உத்தரத்தன்று வள்ளியம்மை திருமணப் படலத்துடன் புராணபடனம் நிறைவுற்றது. அன்று அபிடேகம், வள்ளியம்மை திருமணக்காட்சி, பௌராணிகர்களைக் கௌரவித்தல், புராண ஏட்டுச் சுவடி ஊர்வலம், அன்னதானம் ஆகியன இடம் பெற்றன. புராணபடனத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சைவப்பெரியார் பௌராணிகர் மு. தியாகராசா அவர்கள் உட்படப் பல பௌராணிகர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வுகளில் ஆயிரத்துக்கும் அதிகமான சைவமக்கள் கலந்து பயன் பெற்றனர்.

நால்வர் குருபூசைத் தினங்களில் ஈழத்துத் திருமுறை மன்றத்தினரால் அந்தந்தச் சமயகுரவர்களது புராணம் படிக்கப்படுகிறது.

பேலியகொட பூபால விநாயகர் கோவிலில் புலவர் விசாலாட்சி அவர்களது பெரியபுராண படனம் இடம் பெற்றது- இதிலும் பெருமளவு சைவமக்கள் கலந்து பயனடைந்தனர்.

கதிர்காமக் கந்தன் திருவிழா நாள்களில் கப்பிதாவத்தை முருகன் கோவிலில் வள்ளியம்மை திருக்கல்யாணப் படலம் படிக்கப்படுவதாகவும் அறிகிறோம்.

இவை தலைநகரில் புராணபடனம் பற்றி விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதைக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Essence of Saivaism

Siddhanta Selvar
Professor K. Vajravelu Mudaliar

This phenomenal world has for its first cause the Supreme Being, which is of the nature of immutable consciousness bliss. It is both transcendent and all pervasive. By transcendence we mean that it is so subtle and innermost that ordinary human wisdom cannot grasp at it. It is all pervasive because of its consciousness force that mingles with everything sentient and non -sentient, and moves it with inseperable immediacy. Technically the blissful transcen -dent aspect is called Sivam and the cons cious-force aspect is called Sakti.

Human wisdom or the cognitive potency of the individual selves is defiled with spiri tual darkness and consequently can objectify only the gross material world. The very purpose of cosmic creation is to remove this spiritual defilement by subjecting the individual selves to a cycle of birth and death and disciplining them. While the selves are clothed in their embodiments, they gain partial wisdom and act as agents. So long as they do not realise their true nature and the inner presence which is inseparable from them they are required to eat or experience the fruit of their deeds, good or bad.

At a particular stage, in consequence of the ordeals of birth and death, a stage is reached when the individual self becomes conscious of its true nature and feels the existence of the inner presence. In this wisdom the spiritual guidance given by the scriptures plays an important part. There is also the inner presence of God making the self realise truth by purifying it and releasing it from the natural defilement.

Now the self realises that without the divine ageney and guidance nothing is being done. So with the enlightenment granted by the light of grace of the Divine, the individual self lives a life of devotion in harmony with the divine will. This submiss -ion to the divine will is the self's devoted worship. By means of this worship the individual self gets rid of its defilement, grows in nature and stature and identifes itself with the inner presence. This identification is the state of bliss, the complete release from the world.

The whole scheme of life is a pilgrimage of the self from attachment to the world to the attachment and identifcation with the divining The pilgrimage and the fulfilment of the individual self may be likened unto the process of a greenfruit becoming a ripe one. When the fruit is green it is attached to the bond of the branch of the tree. The attachment gradually gets loosened as the fruit grows riper and riper, until at last it gets itself freed from the bond and falls to the ground. The earth is the Godhead which is the main support and life - giver of the tree as well as the fruit attached to it. The sustenance of the tree as well as the ripen -ing of the fruit takes place from the essence of the earth supplied to the tree. Thus God works through the world the process of maturing and getting release from the worldly attachment of the individual selves.

Hence the prayer:

Triambakam yajamahe suganthim | pustivardhanam
Urvarukamiva bandhanatmrtyoh muksiyamamrtat ||

— *Appendix:* **Sri Rudram**

[We worship the Lord with three eyes emitting sweet fragrance, who increases nourishment; like cucumber from its bond, let us become free with ease from the perishable world, but not from immortality.]

(Courtesy: Saiva Periyar S. Shivapathasundaranar Centenary Number (1978))

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Jaffna - Saiva Paripalana Sabai of 450, K. K. S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna. on 28 - 07 - 1999 (Fullmoon day)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org